1995 நவம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 28, திரு. மா. சா. மா. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை. டாக்டர் எஸ். சுந்தரராஜ், அவருக்குப் பதிலாக கேட்கிறார், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

28—

ஆர். எஸ். மங்கலம் முதன்மைக் கால்வாயைச் சீரமைத்தல்

33361— *திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்:*

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்கலம் பெரிய கண்மாய்க்கு தண்ணீர் அளிக்கும் இடது முதன்மைக் கால்வாயைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நீர்வள மேம்பாட்டுத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் சீரமைத்திட திட்டம் உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே பெரிய கண்மாயாக, கடல்போன்று அதிகத் தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய கண்மாயாக, நாரை பறக்க முடியாத 47 மடைகளை உடைய கண்மாயாக ஆர். எஸ். மங்கலம் கண்மாய் இருக்கிறது. அங்கே, மழைக் காலங்களில் வைகை நதியிலிருந்து வெள்ளம் வரும்போது அந்த வரத்து நீரின் மூலமாக அந்தக் கண்மாய் நிரம்பக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. 1992 நவம்பர் மாதத்திலேயும், 1993 டிசம்பர் மாதத்திலேயும் பெய்த மழையின் காரணமாக ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்கு வரக்கூடிய இடது பிரதான கால்வாயும், கீழநாட்டார் மற்றும் மேலநாட்டார் என்று சொல்லப்படுகின்ற கிளைக் கால்வாய்களும் பழுதடைந்திருக்கின்றன. டெம்ப்ரரி க்ளோஸர் என்று சொல்லப்படுகின்ற திட்டத்தின் கீழ் இன்றையதினம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு சில நிதி ஒதுக்கீடு செய்து அவை சீர்செய்யப்பட்டிருக்கின்றன.

பெர்மெனன்ட்டாக அதை க்ளோஸர் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அந்த பகுதியில் உள்ள கண்மாய்களுக்கும், ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்கும் அதிகமாகத் தண்ணீர் கிடைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர். எஸ். மங்கலம் கண்மாயைப் பொறுத்தவரையில் 47 மடைகள் அல்ல, 48 மடைகள் இருக்கின்றன. அது மிகப் பெரிய கண்மாய் என்பதை அரசு அறியும். அந்த கண்மாய்க்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக, கீழ்நாட்டார், மேல்நாட்டார் பிரிவு கால்வாயின் வாயிலாக தண்ணீர் கொண்டு வருவதற்கு நீர் வள மேம்பாட்டு தொகுப்பு திட்டத்தின் கீழ் ஏறத்தாழ தொன்னூற்று இரண்டு இலட்சத்து, தொன்னூற்று ஏழாயிரம் ரூபாய் ஒதுக்குவதற்காக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உலக வங்கித் திட்டம் நிறைவேற்றுகின்றபோது இதற்குரிய பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திரு. கே. முனிவெங்கடப்பன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கா. பூ. முனுசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

29—

இராயக்கோட்டையில் வீட்டு வசதித் துறையின் மூலம் வீடுகள் கட்டுதல்

***44924—*திரு. கே. முனிவெங்கடப்பன் :**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், இராயக்கோட்டையில் வீட்டு வசதித் துறையின் மூலம் வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?